சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. OS. 218/2018**

2024ம் ஆண்டு நவம்பர் மாதம் 13ம் நாள் புதன்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய **வா.சா.1**-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.வெ.லட்சுமி, எழுத்தர் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப் பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாபு | தொழில் | ஓட்டுனர் |
| தந்தை பெயர் | ராஜேந்திரன் | ஜாதி | |
| கிராமம் | பழங்காமூர் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | |

**13.11.2024** முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 05.10.2000 தேதியிட்ட பட்டா உண்மை நகல் **வா.சா.ஆ.1,** 11.07.2012 தேதியிட்ட தானசெட்டில்மென்ட் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2,** ( பிரதிவாதித்தரப்பு வழக்கறிஞர் 11.07.2012 தேதியிட்ட தான செட்டில்மென்ட் பத்திரம் அசல் வாதியிடம் உள்ளதால் அசல் ஆவணத்தை தாக்கல் செய்யாமல் சான்றிட்ட நகல் தாக்கல் செய்தது சம்மந்தமாக ஆட்சேபனை தெரிவித்து வா.சா.ஆ.2 ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) 08.07.2013 தேதியிட்ட மனைவரி தோராய பட்டா சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3,** அரசு வழிகாட்டுதல் மதிப்பு அசல் **வா.சா.ஆ.4,** (பிரதிவாதித்தரப்பில் வா.சா.ஆ.4 வழங்கப்பட்ட தேதி குறிப்பிடப்படவில்லை என்று ஆட்சேபனை தெரிவித்து ஆடசேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) ஆரணி உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.27/2017 வழக்கின் தாவா சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5,** ஆரணி உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.2/2018 வழக்கின் தாவா சார்வு செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.6,** 07.07.2018 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.7** 26.07.2018 தேதியிட்ட பதில் அறிவிப்பு **வா.சா.ஆ.8,** தாக்கல் செய்கிறேன். வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பு பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.